RESEARCH ARTICLE

Asian Research Association

INDIAN JOURNAL OF MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

DOI: 10.54392/ijmrd2442

# The Eminent Scholars who Praise Aruppukottai Kasi

**M. Palani** [a,*]

[a] Department of Tamil, Sanghamam College of Arts And Science, Annamangalam-604210, India.

*Corresponding author Email: palanimtamil@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijmrd2442

Received: 08-08-2024; Revised: 21-11-2024; Accepted: 30-11-2024; Published: 17-12-2024

**Abstract:** Saints are those who have achieved achievements in one or many fields, with moral discipline, loving others as themselves, and living gracefully among human beings. They have the maturity to embrace and love their neighbors as much as they do, transcending many differences. Moreover, they live in the path of Kaniyan Poongundran's world unity of "Yaadhum Oore Yaavarum Kelir". Such saints have appeared on the soil of Tamil and India and have enriched mankind. Poet A.Kasi has captured their glories and multifarious achievements in his poems.

**Keywords:** Writer Kasi, Tamil Saints, Moral, Kaniyan Poongundran, Aruppukottai Kasi, Eminent Scholars

**Language:** Tamil

# அருப்புக்கோட்டை அ.காசி போற்றும் சான்றோர்கள்

**மு. பழனி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, தமிழ்த்துறை, சங்கமம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அண்ணமங்கலம்-604210, இந்தியா

## முன்னுரை

ஒரு துறையினிலோ அல்லது பல்வேறு துறைகளினிலே சாதனைகள் படைத்து அற ஒழுக்கத்துடனும், தன்னைப் போல பிறரையும் நேசித்து மானுட மத்தியில் அருட்பிரகாசமாய் வாழ்பவர்களே சான்றோர்களார். இவர்கள் பல்வேறு வேற்றுமைகளைக் கடந்து தங்களைப் போல் அயலாரையும் அரவணைத்து நேசிக்கும் மனப்பக்குவம் கொண்டவர்களாய் இருப்பர். மேலும், அவர்கள் “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற கனியன் பூங்குன்றனின் உலக ஒருமைப்பாட்டின் வழியினிலும வாழ்பவர். இத்தகையச் சான்றோர் தமிழ் மண்ணிலும், இந்திய மண்ணிலும், தோன்றி மானிடத்தை செழிக்கச் செய்துள்ளனர். அவர்களின் அருமை பெருமைகளையும், பல்துறைச் சாதனைகளையும் கவிஞர் அ.காசி தம் கவிதைகளில் எடுத்து இயம்பியுள்ளார். அதனை இக்கட்டுரையில் காண்போம்.

## இலக்கியச் சான்றோர்கள்

### ஔவையார்

பெண்பாற் புலவர்களில் தலைசிறந்தவர் ஔவையார் ஆவார். இவர் மன்னன் அதியனின் உற்றத் தோழர். அத்தகைய ஔவையின் புகழினை அ.காசி அவர்கள் கீழ்க்கண்ட கவிதையால் சிறப்பிக்கின்றார்.

“அரிதில் பெற்ற நெல்லிக் கனியை

அதியமான் ஔவை யாருக்கு நல்கி

பரிவுடன் நீடு வாழ வாழ்த்தினார்

பண்பில் உயரிய ஔவைப் பிராட்டியும்

கரிய நஞ்சினை உண்ட சிவன்போல்

காலம் நீடு வாழ்க வாழ்த்தினாள்

அரியதோர் நட்புக் கிலக்கணமாக

அதியமான் ஔவை ஒளிரக் கண்டோம்"

என்ற தம் கவிதை வரிகளில், நெல்லிக்கனி ஈந்த அதியனின் சிறப்பினை அறிய முடிகின்றது (Kasi, 2013).

## கபிலர்

பாரியின் நெருங்கிய நண்பரான கபிலரின் நன்றி மறவாத்தன்மையையும் பாரி மகளிரான அங்கவை சங்கவை ஆகியோரை, பாரி இறந்து பின்னர் அவர்களுக்கு மணமகன் தேடி திருமணம் செய்து வைத்து பாரியின் மெய்யான நண்பராய் கபிலரை அறியமுடிகின்றது.

இதனை,

"ஒல்லையே தேரைச் செலுத்திச் சென்ற

உயரிய பாரிதம் முன் கண்ட

முல்லைக் கொடிக்குத் தேரை ஈந்து

முழுதாய்ப் பற்றி படரச் செய்தான்

அல்லல் உற்ற பாரி மகளிர்

அங்கவை சங்கவை இருவர் தம்மை

இல்லக் கிழத்திகளாய் மலையமான் மக்களை

ஏற்கச் செய்தார் கபிலர் தானே!" (Kasi, 2014)

என்ற கபிலரின் நன்றி மறவாத நட்பையும், பாரிமகளிரை தன் மகளாய் பாவித்து திருமணம் செய்து வைத்து கபிலர் தன் நன்றிக் கடன் தீர்த்ததையும், கவிஞர் அ.காசி அவர்கள் ஆதாரமாக உணர்த்தியுள்ளார் என்பதனை நோக்கும் போது,

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை

செய்நன்றி கொன்ற மகற்கு" (Thiruvalluvar, 2002)

"உதவி வரைத்தன்று உதவி உதவி

செய்யப்பட்டார் சால்பின் வரைத்து" (Thiruvalluvar, 2002)

என்ற வள்ளுவரின் குறளடிகளுக்கேற்ப கபிலர் தம் பாரி மகளிர்க்கு வாழ்வளித்ததை அறியமுடிகின்றது. மேலும் பெரும்பாலும் புலவர்கள் நன்றி மறவாத பண்புடையோர் என்பதனையும் அறியலாம்.

## திருவள்ளுவர்

ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னர் தோன்றி உலகமே ஏற்கத் தகுந்த உலகப் பொதுமறை நூலினை யாத்திட்ட தெய்வப்புலவன் திருவள்ளுவரையும் கவிஞர் அ.காசி அவர்கள் சிறப்பித்துப் பாடுகின்றார்.

"தமிழ்த்தாய் பெற்ற தவப்புதல்வன் - வள்ளுவர்

தரணிக் கவரோர் வழிகாட்டி

இமிழ்கடல் சூழ்ந்த உலகுக்கு - குறளே

இருளை அகற்றும் ஒளிவிளக்கு" (Kasi, 2001)

என்ற குறளின் மகிமையை உணர்த்துவதையும்,

"மனித வாழ்வைப் புனிதமாக்கும் - வேத

மந்திரமாவது திருக்குறளே!

இனிய பண்பெலாம் நமக்களிக்கும் - நல்ல

ஆசான் வள்ளுவர் வழிசெல்வோம்" (Kasi, 2013)

என்ற வரிகளில் குறளையும், வள்ளுவரையும் ஆசானுக்கு ஒப்பிட்டு, அவர் வழி செல்வோம் என்று மக்களை அழைப்பதையும், மேலும் வள்ளுவர் வழங்கிய நடுவு நிலைமை என்ற தலைப்பினில் கூறும் கவிதை வரிகளில்,

"அற நிலையிலிருந்தொருவன் தீங்கு செய்ய

எண்ணிவிட்டால் தான்கெடுவதை அன்றே அறிவன்

வறுமையுற்ற போதிலும் தன் குணத்திலிருந்து

விலகாமல் வாழபவரே நடுநிலையாளர்" (Kasi, 2016)

என்று நடுவு நிலையாளரின் நேர்மையானத் தகுதியினை எடுத்துரைக்கின்றார்.

"பொய்யா மொழியார் புகன்ற குறளைப்

படித்துத் தேர்ந்த மக்கள் எல்லாம்

அய்யமின்றி அறிவாளி யாவார்

அறிஞர் பட்டம் உவந்து ஏற்பர்" (Kasi, 2016)

என்ற வரிகளில் குறளினை யாவரும் படித்தால் அறிவுப் பெற்று இருள் சூழ்ந்த வாழ்வினை வெல்லலாம் என்று கவிஞர் அ.காசி அவர்கள் அறிவுறுத்துவதை அறியமுடிகின்றது.

## வள்ளலார்

ஒவ்வொரு மனிதன் மீதும் மட்டுமல்ல எல்லா ஜீவராசிகள் இடத்தும், அன்பையும் கருணையும் காட்ட வேண்டும் என்று வள்ளல் பெருமகனார் உலகுக்கு உரைத்தார். மேலும் பசிப்பிணியையும, சமூக அநீதிகளையும் வள்ளலார் சாடினார்.

"சாதியும் மதமும் சமயமும் தவிர்ந்தேன்

சாத்திரக் குப்பையும் தணந்தேன்" (Ramalinga Adigalar, 2002)

நால்வருணம் ஆசிரமம் ஆசார முதலா

நவின்றகலைச் சரிதமெல்லாம் பிள்ளை விளையாட்டே" (Ramalinga Adigalar, 2002)

என்பன போன்ற அருட்பா வரிகளின் மூலம் மனிதர்களின் அக இருளையும், புற அழுக்கையும் போக்கிய வள்ளலாரின் கொள்கையானது உலகிற்கு ஞான ஒளியாகும். இத்தகைய புரட்சித் துறவியின் புகழினைப் கவிஞர் அ.காசி பாடும் போது,

"வித்தகு கல்வி திருக்குறள் வகுப்பினை - முதன்முதல்

வளர்த்தவர் இராமலிங்கரே!

முத்தமிழ் வடமொழி ஆங்கிலம் மூன்றுடன் - முதன்முதல்

மும்மொழிப் பள்ளி தொடங்கினார் காண்!

புத்துயிரூட்டும் முதியோர் கல்வியை - முதன்முதலில்

பரப்பிய வள்ளல் வள்ளலாரே! (Kasi, 2001)

என்ற அருட்பாவடிகள் வள்ளலார் செய்த செந்தமிழ்த் தொண்டை வெளிப்படுத்துகின்றார்.

## கம்பர்

தமிழ் கூறும் நல்லுலகினில் கவிச்சக்கரவர்த்தி கம்பருக்கு என்று தனி இடம் உண்டு. உலகத் தமிழர்களைத் தமது கம்பராமாணத்தின் மூலம் மானுட ஒழுக்கத்தையும, மனிதப் பண்பையும், கவிதை வளத்தையும், அறிமுகப்படுத்தினார். கம்பரைப் பற்றி கவிஞர் கண்ணதாசன் புகழ்ந்துரைக்கும் போது,

“கால மெனும் சூழியிலும்

காற்று மழை ஊழியிலும்

சாகாது கம்பனவன் பாட்டு - அது

தலைமுறைக்கு எழுதி வைத்தப்பாட்டு”. (Kannadhasan, 1989)

என்று கவியரசு கண்ணதாசன் கம்பரின் கவிப்பெருமையை உச்சத்தில் வைத்து உணர்த்துகின்றார். கவிஞர் அ.காசி அவர்களும் கம்பரைப் போற்றிப் பாடுகையில்,

“கம்பன் கைபட்டதெல்லாம் கவிதையென்பேன்

கம்பனவன் வாழ்வெல்லாம் கவிதையென்பேன்

கவிக் கோயில் கடவுளாய் கம்பரானார்

கவித்தமிழ்க் கோட்டைக்கே வேந்தரானார்”

“பண்புள்ள இராமனை நமக்களித்தார்

பண்பற்ற இராவணனை வெறுத்தொழித்தார்

கற்புடை சீதையை நமக்களித்தார் - நமக்கு

கம்பர் இராமாயணம் தந்து வாழ்வளித்தார்” (Kasi, 2016)

என்பன போன்ற கம்பரின் கவிதையையும், கம்பரையும் போற்றிப்பாடும் கவிஞரின் கவிவரிகளும் போற்றத்தக்கன.

## பாரதியார்

20 ஆம் நூற்றாண்டின் மிகச்சிறந்த மகா கவிஞன் பாரதியார் ஆவார். ‘பாட்டுக் கொருப் புலவன் பாரதியடா’ என்றக் கூற்றுக்கேற்ப பாரதியார் அவர்கள் கவிதையே வாழ்க்கையென வாழ்ந்து பெண்ணுரிமை, மண்ணுரிமை, ஆன்மிகம், இன்னும் பல தளங்களிலிருந்தும் தமது பாட்டுப் பயணத்தைத் தொடர்ந்து காலத்தை வென்றுக் கவிஞரானார். பாரதியார் பற்றி அவருடைய சீடரான பாரதிதாசன் தமது கவிதையில் அவரின் சீர்திருத்தக் கொள்கையினைப் பதிவு செய்கின்றார்.

இதனை,

“பாரதியார் உலக கவி! அகத்தில் அன்பும்

பரந்துயர்ந்த அறிவினிலே ஒளியும் வாய்ந்தோர்

ஓருருக்குக் கொரு நாட்டுச் சூரியன்தான

ஓட்டைச்சான் நினைப்புடையார் அல்லா மற்றும்

வீரர் அவர்.....!! . (Kasi, 2004)

என்ற வரிகளில் தனது கவிக்குருவாகிய பாரதியை, பாரதிதாசன் புகழ்ந்துப் பாடுகின்றார். கவிஞர் அ. காசியும் தமது கவிதையில் பாரதியின் பெருமையை எடுத்துரைக்கையில்,

“பாரதி தமிழால் உயர்ந்தார் காண் - தமிழும்

பாரதியாலே உயர்ந்தது காண்

சீருறு தொணியால் கவியியற்ற - அதனால்

செந்தமிழ் இசையும் ஓங்குது காண்”

“எல்லோரும் ஓர்குலம் எல்லோரும் ஓரினம்

எல்லோரும் இந்திய மக்களென்று

வல்லமை கூட்டி ஊக்கு விக்கும்

வள்ளல் பாரதி கவிதையைப் போற்றுவோம்”. (Kasi, 2004)

என்பன போன்ற வரிகளின் மூலம் கவிஞர் அவர்கள் பாட்டுக்கொரு புலவனின் கவிப்பெருமையையும் அவரின் சீர்த்திருத்தச் சிந்தனைகளையும் வெளிப்படுத்துவதை அறியமுடிகின்றது.

## மன்னர் சான்றோர்கள்

சங்க காலத்தில் மன்னர்களை மக்கள் மட்டுமல்ல. புலவர்களும் இறையென நினைத்துப் போற்றி வணங்கி வந்தனர். அதேபோல் மன்னர்கள் மக்களையும், தமிழ்ச்சான்றோர்களான புலவர்களையும் தங்களின் இருவிழிகளாய் பாவித்து பல உதவிகள் செய்து வந்தனர். கவிஞர் அ. காசி அவர்களும், சோழ மன்னர்களின் வரலாற்றை வெண்பாக்கள் மூலம் படைத்து மன்னர்களுக்குப் பெருமை சேர்த்துள்ளார் என்பதனை அறியமுடிகின்றது.

கவிஞர் சோழ மன்னர்கள் பலரைப் பாடியுள்ளார். குறிப்பாக மனுநீதிச் சோழனையும், கரிகால் சோழனையும் பாடியிருப்பது மிகவும் போற்றத் தக்கதாகும்.

## மனுநீதிச் சோழன்

அறியாமல் தேரின் சக்கரத்தில் பசுவின் கன்றினைக் கொன்ற குற்றத்திற்காக தன் மகனையே அதே தேர் சக்கரத்தில் கொன்று நீதியை நிலைநாட்டிய மனுநீதிச் சோழனைப் பாடுகையில்,

“ஆராய்ச்சி நன்மணியின் ஒல்லொலி கேட்டு

நீரது கண்ணீர் பசுதுயர் தீர

அருமை மகனை மடித்திட்ட சோழன்

திருசொலும் சேக்கிழார் சொல்”

“வீதி விடங்கன் அருந்தவ தன் மகனை

வீதியில் சார்த்தி படுக்க வைத்து - மாதிற

தேரினை ஓட்டிய சோழனின் நீதிகண்டோய்

வீரிய நேரியோன் வந்து” (Kasi, 2014)

தவறு செய்தோன் தன் மகனென்றும் பாராமல், நீதியை நிலைநாட்ட தன் மகனையே கொன்ற மனுநீதிச் சோழனைப் பற்றி கவிஞர் பாடியிருப்பது சாலப்பொருந்தும்.

## கரிகால் சோழன்

கரிகால் சோழன் அறிவிலும், ஆட்சித் திறத்திலும் மேன்மையுற்றவன். மக்களுக்கும், புலவர்களுக்கும் வாரி கொடுக்கும் பண்பினன். நாட்டையும் நாட்டு மக்களையும் உயிரை விட மேலாகக் கருதி மக்களைக் காத்தவன், அத்தகைய மன்னரின் வீரத்தைக் கவிஞர் அ. காசி அவர்கள் புகழ்ந்துப் பாடுகிறார்.

இதனை,

“பதினாறு வேளிரை வென்றகரி காலன்

எதிர்த்தபெருஞ் சேரலாதன் தன்னைக் - கதிகலங்க

வெண்ணிப் பறந்தலையில் வென்ற திறம் சொல்லும்

வெண்ணிக் குயத்தியார்பார்” (Kasi, 2014)

என்ற வரிகளால், கரிகாலன் போர் திறம் கொண்டவன். எதிரிகளை எதிர்நின்று போரிட்டுத் தோற்கடிக்கும் வல்லமை பொருந்தியவன் என புறநானூற்றில் வெண்ணிக்குயத்தியார் பாடுவது போன்று கவிஞர் காசியும் தன் வெண்பாவால் கரிகால் வளவனின் வீரத்தைப் பாடுகின்றார்.

## முடிவுரை

தமிழ் இலக்கியத் துறையினில் எண்ணற்றப் படைப்புகளை கவிஞர்கள் படைத்து வருகின்றனர். அவ்விலக்கியத் துறைகளில் கவிதை இலக்கியம் சிறந்து விளங்குகிறது எனலாம். சங்க காலம் முதல் தற்காலம் வரை புலவர்கள், கவிஞர்கள் என பல நிலைகளில் தன் கவி ஆற்றலால் மானுடத்தை செழிக்கச் செய்து வருகின்றனர். அவ்வழியில் கவிஞர் அ. காசி அவர்களும் தன் ஆற்றல் மிக்க கவிதை வரிகளால் இலக்கியச் சான்றோர்களையும், மன்னர் சான்றோர்களையும் போற்றி கூறி இருப்பது கவிதை உலகை ஒளிரச் செய்வதாயும், சமூகத்தை நல்வழிப்படுவத்துவதாயும் விளங்குகிறது எனலாம்.

## References

Bharathidhasan, (2018) Bharathidhasan Kavithaigal, Aruna Publications, Chennai, India

Kannadhasan, (1989) Kannadhasan Kavithaikal, Vanathi Pathipagam, Chennai, India

Kasi, A. (2001) Vallalar Valvum Mummanthiramum, Vallalar Raja Arivalayam, Sevveri, India

Kasi, A. (2004) Mahakavi Bharathi Anthathi, Idhayaroja Pathipagam, Chennai, India

Kasi, A. (2013) Indhirasithum Sulosanaiyum, Chithra Pathipagam, Erode, India

Kasi, A. (2014) Sola Mannarin Vera Varalaru, Manimekalai Presuram, Chennai, India

Kasi, A. (2016) Nalvali Kattum Nalla Kavithaigal, Manimekalai Presuram, Chennai, India

Ramalinga Adigalar, (2002) Thiruvarutpa Padalkal, Varthaman Pathipagam, Chennai, India

Thiruvalluvar, (2002) Ulaga Podhumurai Thirukural, Athikesavan Pathipagam, Dharmapurai, India

## Conflict of interest

The Author’s has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License**

© The Author(s) 2024. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License.

**Cite this Article**

M. Palani, The Eminent Scholars who Praise Aruppukottai Kasi, Indian Journal of Multilingual Research and Development, Vol 5, Iss 4, (2024) 7-13. DOI: https://doi.org/10.54392/ijmrd2442